விலை ரூபா 5 00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 5 இதழ் 160
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20 — 07 — 1992

## அரசுக்கு எதிராக நேற்று கொழும்பில் வாகன ஆர்ப்பாட்ட பேரணி

(கொழும்பு)
ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக கண்டனம் தெரிவித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி நேற்று ஒரு ஆர்ப்பாட்டப் பேரணியை நடாத்தியது.

இந்த ஆர்ப்பாட்டப்பேரணி கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரை நடத்தப்பட்டது. இந்தப் பேரணியில் பெருமளவு வாகனங்களே பங்கு

(6ம் பக்கம் பார்க்க)

## எதிரணியரின் நெருக்குதல் பிரேமாவை பாதிக்காது

[லண்டன்]
ஆளுங்கட்சியின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினரின் ஆதரவுடன், ஜனதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக கொண்டு வந்த அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை தோலவிகண்

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகள் மீது முஸ்லிம்கள் அச்சுறுத்தல்

(மட்டக்களப்பு
மட்டக்களப்பு வாழைச்சேனையில் 'பேய்தாளை' அகதி முகாமில் கடந்த நான்கு நாட்களாக முஸ்லிம்கள் தமிழ் மக்களை அச்சுறுத்தி வருவதாகத் தெரிவிக்கபடு 6

## வடக்கு-கிழக்கு யுத்தத்தினுல்

# இலங்கை மிகவும் வறிய நாடாக மாறும் நிலை விரைவில் ஏற்படும்!

### சர்வதேச பொருளாதார இராணுவ நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)
இலங்கை அரசு வடக்கு கிழக்கு பகுதிகளில் முடிவில்லாமல் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் அந்நாட்டை விரைவில் உலகிலேயே மிக வறிய நாடாகத் தள்ளிவிடும் நிலைக்கு உள்ளாக்கிவிடும் என சர்வதேச பொருளாதார, இராணுவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். [6-ம் பக்சம் பார்க்க]

## தமிழ் அகதிகளை வெளியேறுமாறு இராணுவம் நிர்ப்பந்திப்பு

(மன்னர்)
மன்னார்த்தீவின் பேசாலை அகதிமுகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்களை இராணுவத்தினர் வெளியேறுமாறு நிர்ப்பந்தித்துள்ளனர்.

இவர்களை தமது சொந்த இடங்களில் குடியேறுமாறும் தொடர்ந்தும் பேசாலை அகதி முகாமில் தங்க அனுமதிக்க முடியாதென்றும் இராணுவத்தினர் மிரட்டிவருகின்றனர் எனவும் தெரியவருகின்றது.

தமது வீடுகள் சூறையாடப்பட்டும், சேதமாககப்பட்டும் அத்தோடு தமது வீடுகளில் முஸ்லிம்கள் குடியேறி இருப்பதாலும் தாம் அங்கு சென்று வாழமுடியாது எனவும் அந்த மக்கள் இராணுவத்தினரிடம் கூறியுள்ளனர்.

எனினும் அகதி முகாமை விட்டு வெளியேறுமாறு இராணுவத்தினர் இவர்களுக்குக் காலக்கெடு விதித்துள்ளார்கள்எனத் தெரியவருகின்றது.

## அத்துமீறிய குடியேற்றங்கள்: சிங்கள அரசியல் கட்சிகளின் நிலை

(கொழும்பு)
வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் அத்துமீறிய குடியேற்றங்களை சிங்கள அரசியல்கட்சிகள் பல வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளன.

இதுகால வரையில் தமிழ் பிரதேசங்களில் சிங்களவரையும் முஸ்லிம்களையும் குடியேற்றிவரும் அரசு மழுப்பல்

[6ம் பக்கம் பார்க்க]

ஈழநாடு ஸ்தாபகர் நினைவு தினம்

ஈழநாடு ஸ்தாபகர்
அமரர்
கே. சி. தங்கராசா
அவர்களின்
ஐந்தாவது ஆண்டு
நினைவு தினம் இன்றாகும்.

## அத்தனகல சம்மேளன செயலாளராக சந்திரிகா தெரிவு

[கொழும்பு]
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல சம்மேளன பொதுச் செயலாளராக திருமதி சந்திரிகா குமாரரணதுங்கா நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக திருமதி சந்திரிகா தெரிவிக்கையில்; தனது பிரவேசத்தை

(6-ம் பக்கம் பார்க்க)

## கல்முனைப் பகுதியிலிருந்து 50 கலிபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
கல்முனைப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அரியாலை கடல் பகுதியை நோக்கி நேற்றுமுன்தினம் இரவு 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

மேலும் அப்பகுதியில் கடற்படைப் பீரங்கி படகுகளும் நிலைகொண்டு தாக்குதல் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தின.

## ஆனையிறவை தவிர்த்து யாழ். கடலேரி ஊடாகவே மக்கள் பயணம் தொடர்கிறது! - பி. பி. ஸி

(லண்டன்)
ஆனையிறவு ஊடாக யாழ்ப்பாண மக்களைப் பிரயாணம் செய்யுமாறு இராணுவம் அறிவித்திருந்தும், ஆனையிறவு ஊடாகச் செல்வதை விடுத்து ஆபத்துக்கள் நிறைந்துகாணப்படும் யாழ். கடலேரி ஊடாகச் செல்லவே மக்கள் விரும்புகின்றனர் என பி. பி. ஸி. தெரிவித்துள்ளது.

அண்மையில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் நோக்கம், யாழ். குடா மக்களை ஆனையிறவு ஊடாகப் பிரயாணம் மேற்கொள்ளச் செய்வதேயாகும்.

ஆனல் இராணுவ நடவடிக்கை பூர்த்தியாகி விட்டதாகவும் ஆனையிறவு ஊடாக

[6ம் பக்கம் பார்க்க]

## சிங்கள குடியேற்றம் குறித்து தெரிவுக்குழு பிரஸ்தாபிக்கும்

(கொழும்பு)
வெலிஓயா, திருமலை உட்பட வடக்கு-கிழக்கில் ஸ்ரீலங்கா அரசால் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் குறித்து நாடாளுமன்ற தெரிவுக்குழு பிரஸ்தாபிக்கவுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு-கிழக்கில் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சிங்களக்குடியேற்றத்தை நிறுத்துமாறும் மீண்டும் கோரிக்கைகள் பல மட்டங்களிலும் அரசுக்கு பல துறைகளிலிருந்தும் வலியுறுத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (க)

## லண்டன் பல்கலைக்கழகத்தில் இல. தமிழ்மாணவி சாதனை

(லண்டன்)
இலங்கை தமிழ் மாணவியொருவர் லண்டன் பல்கலைக்கழகம் நடாத்திய பரீட்சையில் முதல் வகுப்பில் சித்தியடைந்து சாதனையடைந்துள்ளார்.

லண்டன் பல்கலைக்கழகம் நடாத்திய மின் இயக்கமின் பொறியியல் பி. எஸ். சி (சிறப்பு) பரீட்சையிலேயே இந்த மாணவி சிறப்பு சித்தியடைந்துள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த செல்வி. மோகனு குலவரதராசா என்பவரே அம்மாணவியாவார். (க)

## வடபகுதி கடலில் அதிவேக பீரங்கி கப்பல்கள்

(கொழும்பு)
வடபகுதி கடற்பிரதேசத்தில் அதிநவீன அதிவேக பீரங்கிக் கப்பல்கள் மூன்று நேற்று சேவைக்கு விடப்பட்டன.

இதன் வெள்ளோட்டம் திருகோணமலைத் தளத்தில் இடம் பெற்றது. இவற்றுக்குரணவிலு, ரணசிரி, ரணசூ எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சீனுவில் தயாரிக்கப்பட்ட இந்தப் பீரங்கி கப்பலில் அதிநவீன பீரங்கிகளும் ராணுவ சாதனங்களும் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி 45 கோடி ரூபாவாகும். (சு)

# வரி விளம்பரம்

### தென்மராட்சி பாவனையாளருக்கு

விநாயககவசம் கந்த சஸ்டிகவசம், சக்திகவசம், ஸ்ரீ கிருஷ்ணகவசம், நான்கும் ஒரே புத்தகமாக விலை ரூபா 10/- சைவநெறி ஆண்டு ஒன்பது வினாவிடை ரூபா 20/- கிடைக்குமிடம் சிவம் மெடிக்கல்ஸ் ஸ்ரோர்ஸ், புத்தக சாலை, சாவகச்சேரி. (சி-6556)

### வெளிவந்துவிட்டது

சைவநெறி ஆண்டு ஒன்பதிற்கான வினாவிடை தொகுப்பு கு. பரராஜசேகரம் (பி. ஏ) வெளியீடு சரசாலை இந்து இளைஞர் மன்றம் புத்தக விற்பனை நிலையங்களில் கிடைக்கும். விலை ரூபா 20/- (சி-6555)

### மீரா பிரசுரங்கள்

காலத்தை பிரதிபலிக்கும் கதைகள் சமுதாயப் பிடிப்புள்ள கதைகள் மீரா பிரசுரங்களாக இப்பொழுது வெளிவருகின்றன. அறிவை வளக்கவும், ஆற்றலைப் பெருக்கவும் மீரா பிரசுரங்களை தொடர்ந்து வாசியுங்கள். (சி-6548)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார் வேலணைவைத்தியர் சி இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-6561)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ்ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6551)

## ஊழியர்கள் பாதிப்பு

(அரியாலை)

கிளிநொச்சி பகுதியில் கடமையாற்றும் அரச ஊழியர்களும் உத்தியோகத்தர்களும் தற்பொழுது உள்ள போக்குவரத்து இன்மையாலும் அங்கு செல்ல முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா காப்புறுதிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களும் சிலர் வவுனியா செல்ல முடியாது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளதாக தெரியவருகிறது. (59)

## புனித. யாகப்பர் திருநாள்

(அரியாலை)

யாழ். குருநகர் புனித. யாகப்பர் (சந்தியோகுமையோர்) ஆலய வருடாந்தத் திருவிழா 16-ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 5 மணிக்கு ஆராதனை மறை உரைகள், திருப்பலி ஆகியன நடைபெற்று வருகின்றன.

இத் திருவிழா எதிர்வரும் 25-ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் கூட்டுத் திருப்பலி திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் நிறைவுபெறவிருக்கிறது. (59)

## முதலாம் ஆண்டு நாள்
20-7-1992 திங்கள்

## இதய தெய்வத்திற்கு எங்கள் அஞ்சலி

மண்ணிடை வரவு: 20 - 05 - 1938



விண்ணிடை விரைவு: 20 - 07 - 1991

### அமரர் பெனடிற் டனிசியஸ்
(சின்னத்தம்பி - கட்டிட ஒப்பந்தகாரர்)

அன்பின் இருப்பிடமே
ஆர்வத்தின் நிலைக்களமே
இன்பம் தருபவரே
ஈடிணையில் உத்தமரே
உள்ளத்தில் உறைபவரே
ஊக்கம் தருபவரே
எல்லார்க்கும் நல்லவரே
ஐயம் அளிப்பவரே
ஒத்த மனதினரே
ஓயாது உழைப்பவரே
ஔவியங்கள் நீரகற்றி
ஃஸ்மித்த ஓராண்டை
எண்ணி புலம்புகின்ருேர்.

மனைவி, மக்கள், தாய், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மாமன், மாமி,
நண்பர்கள், உற்ருர், உறவினர்கள்.

No 21, றக்கா ரோட்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (சி-6560)

## ஆஸ்பத்திரி ஊழியருக்கு சீருடை

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலையில் ஊழியர்களுக்கான சீருடை தற்போது வழங்கப்பட்டுவருகிறது.

அண்மையில் குமண கப்பலிலிருந்து ஊழியர்களுக்கான வெள்ளை சீருடைகள் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டிருந்தது.

தாதிய உத்தியோகத்தர்கள் உட்பட மற்றும் சகல தரத்திலான சிற்றூழியர்களுக்கு வழங்கப்பட்டுவருகிறது. (56)

## தொழு நோய் ஆய்வு

(புங்குடுதீவு)

தொழு நோய் பற்றிய ஆய்வொன்று அண்மையில் தீவக மக்கள் தங்கியுள்ள யாழ் புகையிரத நிலைய முகாமில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வில் வடமாநில தொழுநோய்த் தடைப் பொறுப்பதிகாரி எஸ். குணரட்ணம், பொது சுகாதாரப் பரிசோதகர் ரீ. மகாதேவன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (101)

## மருந்துகள் வந்தன

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை ஆயுள் வேத இலவச வைத்திய சாலைக்கு போதியளவு மருந்து வகைகள் வந்துசேர்ந்துள்ளன.

மானிப்பாய் பிரதேச சபையின் முயற்சியினால் வந்து சேர்ந்துள்ள இம்மருந்து வகைகளைப் பெறுவதற்கு தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் சிகிச்சை பெற்றுச் செல்வதை காணமுடிகிறது. (71)

## ஜெனரேற்றர் பழுது

(மானிப்பாய்)

யாழ் செயலகத்தில் இயங்கி வந்த ஜெனரேற்றர் கடந்த சில மாதங்களாகப் பழுதான நிலையிலுள்ளது.

இதனால் பிறப்பு அத்தாட்சிப் பதிவேடுகளை ஊழியர்கள் தேடி எடுப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்குவதுடன் அரச அதிபரின் அலுவலகமும் வெளிச்சமின்றி காணப்படுகின்றது. (71)

## சுயதொழில் வேலைவாய்ப்பு

[கொழும்புத்துறை]

இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் தத்தமது பகுதிகளில் மேற்கொள்ளக்கூடிய சுயதொழில் வேலைவாய்ப்புத் திட்ட அறிக்கைகளைச் சகல சனசமூக நிலையங்களும் உடன் அனுப்பிவைக்கும்படி யாழ். மாநகரசபை கோரியுள்ளது.

இத்திட்ட அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டுச் சுயவேலை வாய்ப்புத் தொழிற்துறைகளை மேற்கொள்ளுவதற்குச் சனசமூக நிலையங்களுக்கு 5,000 ரூபா வீதம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (154)

## சவர்க்காரம் விநியோகம்

(அரியாலை)

யாழ். வர்த்தக ஊழியர் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு சன்லைட் கட்டி ஒன்று 9 ரூபாய் வீதம் இரண்டுகட்டிகளை இன்று சங்க மண்டபத்தில் வைத்து வழங்கவிருப்பதாக தலைவர் அறிவித்துள்ளார். [59]

# ஆலயவேள்விக்காக 17 ஆடுகள் பலியிடப்பட்டன

[மானிப்பாய்]

கல்லுண்டாய் காத்தவராயன்ஆலயத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற வேள்வியில் 17 ஆட்டுக் கடாக்கள் பலியிடப்பட்டன.

பலியிடப்பட்ட ஆடுகள் ஒவ்வொன்றும் சுமார் 5000 ரூபா வரை விலை போனதைக் காணக்கூடியதாக இருந்தது. (71)

# விவசாய விளை பொருட்கள் இரவு நேரத்தில் திருட்டு

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் உள்ள வயல் காணிகளில் விவசாயிகளின் விளை பொருட்கள் அனேகமாக இரவு வேளைகளில் இனம் தெரியாத நபர்களால் திருடப்பட்டு வருகின்றது.

விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களான கத்தரி, வெங்காயம், மிளகாய், பீற்றூட், பூசணி, வெண்டி ஆகிய மரக்கறி வகைகள் ஆட்கள் இல்லாத இரவு நேரம் பார்த்து திருடப்பட்டு வருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. [154]

# கல்வித் திணைக்களம் நடாத்தும் விவசாய அறிவுப் போட்டி

(உடுவில்)

ஆண்டு 10, 11ல் விவசாய பாடம் கற்கும் மாணவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் நோக்குடன் கல்வித்திணைக்களம் விவசாய அறிவுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

பாடசாலை, கொத்தணி, கோட்டம், பிராந்தியம், வடக்கு-கிழக்கு மாகாணம் ஆகிய நிலைகளில் போட்டிகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன

கோட்டமட்டப்போட்டிகள் இன்று முதல் 24ம் திகதி வரை நடைபெறும். பிராந்திய நிலையில் போட்டிகள் செப்ரெம்பர் 21 முதல் 25ம் திகதிவரை நடைபெறும்.

10ம், 11ம் ஆண்டுகளில் விவசாய பாடத்தில் கூடிய புள்ளிகளைப் பெற்ற 3 மாணவர்கொண்ட குழுக்களிடையே போட்டிகள் நடைபெறும்.

ஒவ்வொரு நிலைகளிலும் கூடிய புள்ளிகளைப் பெறும் முதல் 3 போட்டியாளர்களும் அடுத்தகட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப்படுவர். இவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் கலாச்சார விளையாட்டுத்துறை அமைச்சு நடத்தும் போட்டியில் கூடுதல் புள்ளிகளைப்பெறும் முதல் மூவருக்கும் சிறந்த பரிசுகள் வழங்கப்படுவதோடு சான்றிதழ்களும் வழங்கப்படும். மாகாண மட்டத்தில் போட்டியிட்ட சகலருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# 49 தம்பதிகளுக்கு பதிவுத் திருமணம்

(புலோலி)

உடுப்பிட்டிப் பகுதியில் 49 தம்பதிகளுக்கு பதிவுத் திருமணம் செய்து வைக்கப்பட்டன.

உடுப்பிட்டி இராசலிங்கம் சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கரவெட்டி பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் திரு. கே. அருட்பிரசாதம், உடுப்பிட்டி பிறப்பு இறப்பு விவாகபதிவாளர் திரு. எஸ். கந்தசாமி ஆகியோர் இத்திருமணங்களுக்கான பதிவுகளை செய்தனர்.

49 தம்பதிகளுக்கான திருமணச்சான்றிதழ்களை பருத்தித்துறை பெரும்பாக காணிப் பதிவாளர் திரு. கே. மாணிக்கவாசகர் வழங்கினார். (61)

# இடம்பெயர்ந்தோர் மீண்டும் திரும்புகின்றனர்

(புலோலி)

கடல் பீரங்கி, ஷெல் தாக்குதல்களினால்செம்பியன்பற்று பகுதியையும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் இடம் பெயர்ந்தோர் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பியுள்ளனர்.

இதேவேளை கடந்த ஒரு வாரகாலமாக மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. இதனை உடனடியாக திறக்குமாறுவடமராட்சி கிழக்கிலுள்ள பொது அமைப்புகள் யாழ். பிராந்த சுகாதார சேவை பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (61)

## "நெருப்பு மழை"

இந்த மண்ணின்
போராட்டப் பாதையில்
எனது மக்கள்..............
நெருப்பு மழையில்
குளித்துக் கொண்டிருக்கும்
இவ் வேளையில்..............
வெளி வருகிறது...............
கவிஞர் வாஞ்சிநாதனின்
''நெருப்பு மழை''

[நாளை 21-ந் திகதி பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இதன் வெளியீட்டு விழா வைபவம் நடைபெறவிருக்கிறது]

# அமரர் கே. சி. தங்கராசா அவர்கள்

# அமைதியாக செய்த சமயப் பணிகளும், கல்விச்சேவைகளும் இன்று பயனளிக்கின்றன

ஈழநாடு பத்திரிகையின் ஸ்தாபகர் அமரர் கே. சி. தங்கராசா அவர்கள் மறைந்து இன்றுடன் ஐந்து வருடம் பூர்த்தியாகின்றது. எத்தனை ஆண்டுகள் சென்றாலும் நம்மிடையே அவர் விட்டுச்சென்ற பணிகள் என்றும் அவரை நினைவூட்டிக்கொண்டே இருக்கும்.

1958-ம் ஆண்டிலே யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'ஈழநாடு' பத்திரிகை அக்காலம்தொட்டுப் பெரும் கஷ்டங்களையும், இடையூறுகளையும் தாங்கி இன்றும் இந்த

**இன்று 5வது நினைவு தினம்**

ஈழத்திலே வெளிவந்துகொண்டிருக்கின்றது.

இந்தக் காலகட்டத்திலே இப்பத்திரிகை மூலம் உருவான எத்தனையோ பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் உலகெங்கும் பரவித் தமிழ் எழுத்துப்பணி செய்து வருகின்றனர்கள் இது அமரர் கே. சி. தங்கராசா செய்த சேவை என்றால் மிகையாகாது.

கொழும்பிலே தமிழர்களுக்கென 1951 இல் ஸ்தாபிக்கப்பட்ட இரு இந்துக்கல்லூரிகளும், கலாசார நிலையமான பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபமும் அமரர் கே. சி. அவர்களினது அயரா முயற்சியிலேயே இன்றும் விரிவடைந்து பணிசெய்து வருகின்றன.

அவரது வாசஸ்தலத்திலே அவர் வைத்திருந்த பெறுமதி மிக்க காந்திய நூல்களும் மற்றும் பல நூற்றுக்கணக்கான



நூல்களும் தற்போது நூல் நிலையத்திலே புகுந்து எம்மவர்க்கு கல்வியறிவுக்கு உதவியளிக்கின்றன.

அவர் அமைதியுடன் இருந்து இலைமறைகாயாக செய்த சமயப் பணிகளும், கல்விப் பணிகளும் இன்றும் எல்லோருக்கும் பயனளித்து வருவது போல் என்றும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

1907 ம் ஆண்டு ஜூன் மாதம் 20 ம் திகதி கந்தப்பிள்ளை சிற்றம்பலம் அவர்களுக்கும், தையல்நாயகி அவர்களுக்கும் மகனாக யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலே பிறந்த அவர் யாழ். இந்துக்கல்லூரியிலே கல்விகற்று பின் கொழும்பிலே கல்வியை நிறைவு செய்தார்.

றப்பர் கட்டுப்பாடு இலாகாவில் பணியை ஆரம்பித்த இவர், பத்திரிகை வெளியீட்டு ஸ்தாபனமான 'ரைம்ஸ் ஓவ் சிலோன்' நிறுவனத்திலே பின்னர் பணிபுரிந்தார்.

1958-ம் ஆண்டுமுதல் இருபது வருடங்கள் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத் தலைவராக இருந்து அத்தாபனம் வளரப் பெரும்பணிசெய்தார். இக்காலத்திலே இவர் யாழ்ப்பாணத்திலே 'ஈழநாடு' பத்திரிகையை ஆரம்பித்து பல கஷ்டங்களிடையே வெளிவரப் பெரிதும் பாடுபட்டார்.

வெள்ளவத்தையிலே இவரால் ஆரம்பிக்கப்பட்ட தனியார் வைத்தியசாலை ஒன்று இன்றும் அங்கு பிரபல்யத்துடன் வேறு முகவர்களால் நடாத்தப்பட்டு வருகின்றது.

நீண்டகாலம் இவர் நம்பிக்கைப் பொறுப்பாளராக இறுதிவரை பாதுகாத்துவந்த 'மகாராஜா' நிறுவனம் பேரும் புகழுடன் வளர்ந்து இன்று தொலைக்காட்சி சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

பிரமச்சரியத்தை அனுஷ்டித்து இத்தகு பெருமைகளைச் செய்த இப்பெரியார் 1937 ஜூலை 20 ம் திகதி இம்மண்ணுலக வாழ்வை நீத்தார். இத்தினத்தில் அவர் விட்டுச்சென்றபணிகளை திறம்படச் செய்ய உறுதிபூணுவோமாக.

**மாணிக்க லீலா விநோதன்**

---

# பேச்சைக் குறைத்து செயலில் பலசாதனை படைத்த பெரியார்

தமிழ் ஈழத்தில் முதலாவது தமிழ் தினசரியை ஆரம்பித்து தமிழ் வளர்த்த பெருந்தகையும், தமிழ் ஈழத் தமிழ்த் தினசரிகளின் தந்தையுமான அமரர் கே. சி. தங்கராஜா அவர்கள் மறைந்து இன்று ஐந்தாவது ஆண்டு நினைவு தினமாகும்.

தமிழ் மக்களினது கலை, கலாசார எழுச்சியை பேதனது உயிர்மூச்சாகக்கொண்டு வாழ்ந்த பெரியார் கே. சி. தங்கராஜா பல சமூகசேவை ஸ்தாபனங்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார்.

இவர் றப்பர் கட்டுப்பாட்டு திணைக்களத்தில் சேர்ந்து பின்னர் மேற்படி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பதவிக்கு உயர்ந்தார். அரச துறையிலிருந்து விலகியபின் தனியார்துறையில் சேவையாற்ற அழைப்பு தானாகவே அவரைத்தேடி வந்தது. றப்பர் ஏற்றுமதித்துறையில் முன்னணி வகித்த மக்கீஸ் கம்பனியின் முகாமையாளர் பதவியைஅலங்கரிப்பதற்கு அவர் அழைக்கப்பட்டார். 1947ம் ஆண்டு டைம்ஸ் ஒவ் சிலோன் நிறுவனத்தில் செயலாற்றப் பணிப்பாளராகவும் நிறுவனப் பணிப்பாளர் சபைச் செயலாளராகவும் பொறுப்பேற்றார். அக்காலத்தில் பிரபல பத்திரிகையாளரான பிராங்க் மொரயஸ் இலங்கை வந்து 'டைம்ஸ் ஒவ் சிலோன்' பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்பதற்கு இவரே முக்கிய காரணமாகவிருந்தார்.

1958ம்ஆண்டு கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். மேற்படி கூட்டுத்தாபனத்தின் தலைவராக 20 ஆண்டுகள் பணிபுரிந்தார். அதன் வளர்ச்சிக்கும்,சீரமைப்புக்கும் நவீன திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தி வெற்றிகண்டார். 1978ம் ஆண்டு அப்பதவியிலிருந்து ஓய்வுபெற்றார்.

இவரது தாய்வழி மாமனாரும் தமிழ்நாட்டில் சிதம்பரத்தில் துறவு பூண்டுவந்தவருமான இலக்கணசுவாமி எனும் ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் அவர்களை தமிழ்நாட்டில் 1948ம் ஆண்டு தரிசித்த சமயம் தமிழ் நூல்களை வெளியிடும் நிறுவனமொன்றை ஆரம்பிக்கவேண்டும் என்ற கருத்து இவர் மனதில் உருவாயிற்று. அதுவே பின்னர் 'ஈழநாடு' நிறுவனமாக மலர்ந்தது எனலாம்.

1959 பெப்ரவரி மாதம் 11ம் திகதி ஈழநாடு பத்திரிகையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தார். கொழும்புத்துறை யோகசுவாமிகள்மீது அவர் பற்றுதல் உள்ளவராயிருந்தார். 'ஈழநாடு' பத்திரிகையில் முதல் பிரதியை டார்த்தவுடன் ''ஏசுவார்கள், எரிப்பார்கள் உண்மையை எழுதுங்கள், உண்மையாய் எழுதுங்கள்'' என யோகசுவாமிகள் அருளிய வார்த்தைகள் இவருக்கு மிகுந்த நம்பிக்கையை ஊட்டின.

1981ம் ஆண்டு ஈழநாடு நிறுவனக் கட்டிடம் கொழும்பிலிருந்து வந்த அரசபடையினரால் எரித்து சாம்பராக்கப்பட்டபோது அமரர் தங்கராஜா யோகசுவாமிகளின் மேற்படி திருவாக்கினையே நினைந்து உருகினார்.

அரசாங்கத் துறையிலும், கூட்டுத்தாபன, தனியார் துறையிலும் அவர் பொறுப்புமிக்கபலஉயர்பதவிகளை வகித்துவந்தபோதிலும் சமயப்பணிகளையும் சமுதாயப்பணிகளையும் அவர் மறந்துவிடவில்லை.

யாழ். ஸ்ரீகதிரேசன் ஆலயத்தை நிர்வகிக்க அறங்காவலர் சபையொன்றை ஆக்கிய பெருமையும் அமரர் தங்கராஜாவையே சாரும்.

பேச்சைக் குறைத்து செயலில் சாதனைகள் பல புரிந்த பெரியார் இவர். உயர்ந்த நோக்கத்தோடு உன்னத பணிபுரிந்த இவரின் நாமம் என்றும் வாழும்.

— மா. துரைநாயகம்

---

## வெங்கட்ராமன் சென்னையில் தங்கியிருக்க முடிவு

(சென்னை)

இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் பதவிக்காலம் முடிந்தவுடன் சென்னையில் தங்கியிருக்க முடிவு செய்துள்

(5-ம் பக்கம் பார்க்க)

---

## சுவரொட்டித் தடையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(சென்னை)

சுவரொட்டி தடைச்சட்டத்தை திரும்ப பெறக்கோரி தி. மு. கவினர் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர்.

தி. மு. க.வின் தென் சென்னை மாவட்ட அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளது.

இம்மாத இறுதியில் மாநகர காவல்துறை ஆணையர் அலுவலகம் முன் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (ரி)

---

## காந்தி சிலை அகற்றப்பட்டு எம். ஜி. ஆர். சிலை அமைப்பு

(சென்னை)

சென்னையில் காந்திசிலையை அகற்றிவிட்டு எம். ஜி. ஆர். சிலை நிறுவப்பட்டுள்ளதாக ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி குற்றம் சாட்டியுள்ளார்.

மாநிலங்களவையில் உரையாற்றும்போது இவர்இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை அவர் வற்புறுத்தியுள்ளார். (ரி)

---

பஞ்சாப்பில்

## சுவர் வீழ்ந்து 20 பேர் பலி

(சண்டிகார்)

பஞ்சாப் அமிர்தசர் நகரில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 20 பேர் பலியானார்கள். மற்றும் 14 பேருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. (கே)

---

## நியாய விலையில் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ காவல்துறையினரால் வியாபாரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் நேற்று முன்தினம் பொதுமக்களுக்கு நியாயவிலையில் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் சென் மேரீஸ் தேவாலய முன்றலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் வேளையில் ஒரு குடும்ப உலர் உணவு அட்டைக்கு 1/4 போத்தல் தேங்காய் எண்ணெயும் ஒரு சவர்க்காரமும் வழங்கப்பட்டது. (56)

---

## தி. மு. க.விற்கு ஜெயலலிதா இறுதி எச்சரிக்கை

(சென்னை)

தொடர்ந்து வன்முறையில் ஈடுபடுவதற்கு தி. மு. க.வை அனுமதிக்கமாட்டோம் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா எச்சரிக்கை செய்துள்ளார்.

எதற்கெடுத்தாலும் ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்தி வன்முறையைத் தூண்டுவது தி. மு. க.வின் செயற்பாடாக இருக்கிறது.

இந்நிலையை தொடர தமிழக அரசு இனிமேல் அனுமதிக்கமாட்டாது. தி. மு. க.வினருக்கு இதுவே இறுதி எச்சரிக்கைஎன்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி)

---

## அரசுசார்பற்ற நிறுவனங்கள் மூலம் உதவி பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள், அனர்த்தங்களால் துன்பப்படும் மக்கள் தாங்கள் வாழுகின்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இயங்கி வருகின்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் தமது உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அரசு சார்பற்ற நிறுவனங்களின்இணையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கஷ்டப்படும் மக்கள் உதவி பெற இணையத்தின் தலைமையகத்துக்கு வீணாக அலையத் தேவையில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களுடைய நலன்கருதி மேற்படி இணையத்தின் செயற்பாடுகள் ஒவ்வொரு பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் உள்ள ஸ்தாபனங்களூடாகவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (109)

# “மாணவர்கள் தனியார் கல்விக் கூடங்களை நாடும் நிலை மாறவேண்டும்”

## — கல்விப் பணிப்பாளர்

(உடுவில்)

“பரீட்சையை மட்டும் நோக்கமாக கொண்டு செயல்படும் தனியார் கல்விக்கூடங்களை நாடும் மனப்பாங்கு மாறவேண்டும். ஆசிரியர்களும் அவசிய தேவைகளில்லாமல் லீவு எடுப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்”.

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினார்:

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமை வகித்து வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றினார்.

திரு. சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது:

“தமிழரின் கலை, கலாசாரம் பண்பாடு ஆகியன அழியாமல் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும் என பொன் இராமநாதன் விரும்பினார். அவரது விருப்பத்தை ஈடுசெய்யும் வகையில் இராமநாதன்கல்லூரி பண்பாட்டிலும், கலையிலும் சிறப்புற்று விளங்குகின்றது.

மருதனார்மடம் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பரிசளிப்பு விழா ஒவ்வொரு பாடசாலைகளிலும் நிகழவேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகளின் திறமைகளை கண்டு பெருமிதமடைய பரிசளிப்பு விழாக்கள் வழிசெய்யும்.

தெல்லிப்பழை துர்க்கா துரந்திர தேவஸ்தான தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

மாணவியரின் ஆங்கில நிகழ்ச்சிகள், தில்லானா, நாட்டிய நாடகங்கள், ஆகிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (1:9)

# சனசமூக நிலையங்களின் விளையாட்டுப் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் சனசமூக நிலையங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 28ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எறிபந்தாட்டம், கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், தாச்சி, எல்லே ஆகிய விளையாட்டுகள் இப்போட்டிகளில் இடம் பெறும்.

இப் போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்கள் தேவையானோர் யாழ் நாவலர் வீதியில் உள்ள யாழ் மாநகரசபை நாவலர் கலாசார மண்டபத்தில் நேரில்தொடர்புகொள்ளுமாறு சமாச விளையாட்டுக் குழுத் தலைவர் திரு. எஸ். ரி. கணநாதன் தெரிவித்துள்ளார். (154)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தேர்வு: 24, 25ந் திகதி நடைபெறும்

[வட்டுக்கோட்டை]

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் திட்டத்தில் பெருந்தொகையான பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 24ம் திகதி காலையில் சுழிபுரம், பண்டத்தரிப்பு கொத்தணிகளை சேர்ந்தவர்களுக்கும், மாலையில் காங்கேசன்துறை, அம்பனை, தெல்லிப்பழை கொத்தணிகளைச் சேர்ந்தவர்களுக்கும், 25-ம் திகதி காலையில் இளவாலை, வட்டுக்கோட்டை கொத்தணிகளைச் சேர்ந்தவர்களுக்கும், மாலையில் காரைநகர், அளவெட்டி, மல்லாகம் கொத்தணிகளைச் சேர்ந்தவர்களுக்கும் நேர்முகப் பரீட்சை நடைபெறும். (139)

# கைதடி மார்பு நோய் சிகிச்சை நிலையம்: தளபாடங்களை கப்பல் மூலம் கொண்டுவருவதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியில் அமையவுள்ள மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சைவைத்தியசாலைக்குரிய தளபாட உபகரணங்கள் கப்பல் மூலம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப் பொருட்கள் வந்து சேர்ந்ததும் மார்பு நோய் சிகிச்சை வைத்தியசாலை இயங்கத்தொடங்கும்.

இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சுகாதாரப் பகுதி உயரதிகாரிகள் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் தெரிகிறது.

இரண்டாண்டிற்கு மேலாக மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை வைத்தியசாலை மூடப்பட்டிருப்பதால் பல காசநோயாளர்கள் உளவியல் ரீதியிலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

## இடம்பெயர்ந்தவர் வீட்டில் இறைக்கும் யந்திரம் திருட்டு

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து அகதியாக சென்றவரின் வீட்டுத் தோட்டத்திலிருந்த சுமார் 8 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய நீர் இறைக்கும் யந்திரமும், அதற்கான “அல்கத்தீன்” பைப்பும் திருட்டுப்போன சம்பவம் இளவாலை பத்தாவத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தற்காலிகமாக சண்டிலிப்பாயில் தங்கியிருக்கும் திரு. நடராசா என்பவர் தமது வீட்டுக்கு பகல் நேரத்தில் சென்று பார்த்தபோது தமது நீர் இறைக்கும் இயந்திரம் அல்கத்தீன் பைப் என்பன திருட்டுப்போயுள்ளது தெரியவந்தது. (72)

## பரிசு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை நடத்திய பண்ணிசைப் போட்டியில் யாழ் நிலையத்தில் பரிசுபெறும் மாணவர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு யாழ். நிலையத்தில் பரிசுகள் வழங்கப்படும்.

உதவி கல்விப் பணிப்பாளர் திரு சு. கணபதிப்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்புரையாற்றி பரிசில் வழங்குவார்.

## ஆத்திசூடி முற்றோதல் மனனப் போட்டி முடிவுகள்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய இந்துமா மன்றத்தினர் வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே நடத்திய “ஆத்திசூடி” முற்றோதல் மனனப்போட்டியில் சுமார் 180 மாணவர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் 24 மாணவர்கள் பரிசுபெறுகின்றனர்.

இப் போட்டியில் பரிசுபெறுவோர் விபரம் பின்வருமாறு; க. கீதா, தெ. கமலரூபி, ந. சிவராணி, இ. தேவிகாராணி, ம. ரதிவதனா, த. மிர்ணாளினி, பே. மோகனகௌரி, க. அன்பரசி, சு. தனஜா, க சிவனேஸ்வரி, ந. நிறைஞ்சனி, வை. பிரபாகினி, த. தனலட்சுமி, து. பிரியா, ம. கஜேந்தினி, இ. ரமேஷ், த. திருச்செல்வி, பா. கதிர்மதி, ந. கல்யாணி, மு. திருவேணி, தே. கெங்காரதி, ச. பூவிழி, சி. விலாசினி. சி. குசேலா. (139)

## குழந்தைகள் வளர்ச்சி பற்றி ஆய்வு

(புங்குடுதீவு)

யாழ். புகையிரத நிலைய முகாமில் உள்ள ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் வளர்ச்சி தொடர்பான ஆய்வொன்று அண்மையில் நடாத்தப்பட்டது.

வடமாநில தொற்றுநோய் தடைப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சிவபாதம், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்திருமதி சுந்தரலிங்கம் உட்பட பலர் மேற்படி ஆய்வில் பங்குபற்றினர். [101]

## கோப்பாய் மகாவித்தியாலயத்தில் கணித விஞ்ஞான நிலையம்

(யாழ்ப்பாணம்)

கணித விஞ்ஞான மூலவள நிலையம் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் தொடர்ச்சியாக 6 மாதங்களாக செயற்பட்டு வருகிறது.

மேற்படி நிலையத்தில் கணிதத்தில் ஆண்டு 6 தொடக்கம் 11 வரை கற்பிக்கக்கூடிய உபகரண தொகுதி ஒன்றும் எளிய முறையில் விளங்கக்கூடிய வகையில் திறம்பட செய்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்படி மூலவள நிலையம் மெல்லக் கற்கும் மாணவருக்கான செயற்திட்டம் ஒன்றையும் மருதனாமடக் கோட்டத்தில் பரீட்சார்த்தமாக செயற்படுத்தி வருகிறது.

மேற்படி செயற்திட்டத்தை க. பொ. த. (சாதாரண) கல்வி கற்கும் மாணவர்கள் ஆசிரியர்கள் பார்வையிட்டு பயன்பெற்று வருகிறார்கள்.

உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகமும் சேவைக்கால ஆலோசகர் தி. சோமசேகரமும் கணித விஞ்ஞானமூலவள நிலையத்தை நிர்வகித்து வருகிறார்கள். (க)

## விளையாட்டுப் போட்டி

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். முருகேசம்பிள்ளை தலைமையில் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (150)

## விவசாயகுழு கூட்டம்

(மானிப்பாய்)

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் இம்மாதம் 30-ம் திகதி வியாழன் முற்பகல் 11 மணிக்கு யாழ் செயலக ஆலோசனை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

## உள்ளூர் மூலப்பொருளில் ஊட்டச்சத்துமிக்க உணவை தயாரிக்கலாம்

(பண்டத்தரிப்பு)

“எமது பிரதேசத்தில் போஷாக்கின்மை இன்று ஒரு முக்கிய பிரச்சினையாக இருக்கிறது எமது பிரதேசத்தில் உள்ளூரில் சாதாரணமாகக் கிடைக்கும் மூலப் பொருள்களிலிருந்து நல்ல ஊட்டச்சத்துமிக்க உணவு வகைகளை இலகுவாகத் தயாரிக்கலாம்.

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் மானிப்பாய் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட போஷாக்கு உணவு பற்றிய கண்காட்சியின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் பி இரத்தின சபாபதி இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைத்தார்.

யாழ் மாவட்டசுகாதாரகல்வி போதனாசிரியர் திரு. கா. வைத்தீஸ்வரன் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (72)

## இராசி பலன்

20-07-1992

திங்கட்கிழமை

(தமிழுக்கு ஆடி 05)

பஞ்சமி மு.ப. 9-44 வரை, பூரட்டாதி மு.ப. 9-02 வரை, இராகுகாலம் காலை 7 31 முதல் 9 01 வரை, சுபநேரம் பகல் 12.01 முதல் 1.31 வரை, மரணயோகம்.

**மேடம்:** பொருள் விரையம், காரியத்தடை, அலைச்சல்.

**இடபம்:** நெருங்கியவர் வருகை, மங்கல சம்பவம், மகிழ்ச்சி.

**மிதுனம்:** தூரத்துசெய்தி, தனலாபம், குடும்ப சிறப்பு.

**கடகம்:** முன்கோபம், வீண்பழி, அநாவசிய செலவு.

**சிங்கம்:** பெண்ணால் துயரம், பாபசம்பவம், குடும்பப்பிரிவு.

**கன்னி:** தொழில் மேன்மை, கடன்வரவு, தியாகசிந்தை.

**துலாம்:** தொழில் லாபம், பகைவர் உதவி, பயணம்.

**விருச்சிகம்:** உறவினர் பகை, கௌரவ பாதிப்பு, பணமுடை.

**தனுசு:** பொருள் இழப்பு, கருத்துவேற்றுமை, தயக்கம்.

**மகரம்:** மனச்சோர்வு, முயற்சி தோல்வி, குடும்பக் கவலை.

**கும்பம்:** குடும்ப முரண்பாடு மனச் சஞ்சலம், அகங்காரம்.

**மீனம்:** நினைத்தது கைகூடும் தாயன்பு, பொருள்வரவு.

— ஜோஸ்யர்

## பழப்பாகு தயாரித்தல்

(யாழ்ப்பாணம்)

புளியம் பழத்திலிருந்து பழப்பாகு தயாரிக்கும் பரீட்சார்த்த முயற்சியினை தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் உணவு பதனிடும் பிரிவு மேற்கொண்டுள்ளது மேலும் தோடம்பழத்திலிருந்து பரீட்சார்த்தமாகப் பழப்பாகு தயாரிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

உள்ளூரில் பெறக்கூடிய பழவகைகளைப் பதனிட்டு மென்பானங்கள், பழப்பாகு வகைகளைத் தயாரிக்கும் பணியில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தில் உணவு பதனிடல் பிரிவு செயல்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## நோயாளர் அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சுழிபுரம் உப அலுவலகத்தின் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் தொகை அதிகரித்துள்ளது.

அண்மையில் வலிமேற்கு பிரதேசசபை விசேட ஆணையாளர் மேற்கொண்ட முயற்சியினால் இவ் வைத்தியசாலைக்கு பத்தாயிரம்ரூபா பெறுமதியான சித்த ஆயுள்வேத மருந்துவகைகள் வந்து சேர்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (72)

# களத்தில்நிற்கும்புலிகளுக்கு கைகொடுக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

களத்தில் நிற்கும் வேங்கைகளுக்கு கைகொடுப்போம் என்று யாழ் மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கம் அறிக்கையொன்றின் மூலம் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எங்களுடைய மண்ணின் எல்லாத்திசைகளிலும், எதிரி எண்ணற்றபடைபலத்தோடும் புதிகாக வருவித்த ஆயுதங்களோடும் உங்கள் உயிர்க்குருத்துக்களை குறிபார்த்து வளைய வருகின்றான். எமக்கான பெருநிலப்பாதையை தாண்டாடி தொடர்புகளை பிரித்துவிட பெருமுயற்சி செய்கின்றான்.

எங்கள் மண்ணிலே திட்டி திட்டியாய் உயர்ந்து நிற்கின்ற புலி வீரர்களின் புதை குழியில் இருந்து வரும் நெஞ்சை புல்லரிக்க வைக்கின்ற வீரக் காற்றை நீங்கள் சுவாசிப்பவர்கள். இந்த தேசம் எங்கும் மாவீரரின் மரணங்கள் எங்கள் மனதுக்கு உரம் தந்துள்ளன. நெஞ்சிலே நெருப்பு விதைக்கப்பட்டிருக்கிறது. விமானம் வீசிய குண்டுகளும் தூரம் போகும் எறிகணை வீச்சும், துப்பாக்கி வேட்டுக்களும் எப்போதும் எமக்கு கேட்கின்ற கானங்கள் ஆகிவிட்டன பயம் பல காலங்களுக்கு முன்னே பயணம் சென்றுவிட்டது. பால் வழிகின்ற முகத்தோடு பாய்புலிகள் போர்க்களத்திலே மெல்லிய மேனியர் தாங்கிய ஆயுதமும் தூங்காத கண்களுமாய் மண்காத்து நிற்கின்றனா.

இந்த தலைமுறையில் உங்களுக்கு விடிவில்லாவிட்டால் மீண்டும் ஒருமுறை உங்களுடைய வானில் விடிவெள்ளி முளைக்காது. இளஞ்சூரியன் அடிவானில் சிவந்து நிற்கின்றான் எத்தனை கைகளாலும் எட்டிப்பிடிக்கமுடியாத இந்த உத்தமத்தலைவனின் பின்னே வீறுகொண்டெழுங்கள். வேறு வழியில்லை எதிரியின் எண்ணங்களை, அவன் எக்காளத்தை எங்களால் துகள் ஆக்கிவிடமுடியும். உறுதியான தலைமையோடு உரமிக்க மனதோடு திடம்கொண்டு போராடுவோம். இரத்தமிழந்த வேங்கைகளுக்கு இரத்ததானம் வழங்குவோம் காயம் அடைந்த போராளிகளை பராமரிப்போம். களத்தில் நிற்கும் வேங்கைகளுக்கு கைகொடுப்போம். (ரி)

## இன்று

(உடுவில்)

சுன்னாகம் கொத்தணிப் பாடசாலைகளுக் கிடையிலான ஆங்கில தின போட்டிகள் இன்று 20ம் தேதியும் நாளை 21ம் தேதியும் சுன்னாகம்ஸ்கந்தவரோதயா கல்லூரியில் நடைபெறவுள்ளன. (109)

0 0

[உடுவில்]

பண்டத்தரிப்புக் கோட்டப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அலுவலகத்தில் இன்று 20ம் திகதியும் 21ம் திகதியும் பண்டத்தரிப்பு கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. [109]

## அனாதைகள் ஆதரவற்றோருக்கு தொழிற் பயிற்சி

(உடுவில்)

உடல் ஊனமுற்றவர்கள், அனாதைகள், விதவைகள், ஆதரவற்றவர்கள் உழைப்பாளரை இழந்துள்ள குடும்பங்கள் போன்றோருக்கு தொழில் வழி காட்டவும், தொழில் பயிற்சியளிக்கவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்காக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இருந்து தலா முப்பத்தி நான்கு தொழில் பயிற்சி பயிலுநர்களைத் தெரிவு செய்யச் சங்கம் முடிவு செய்துள்ளது.

தொழிற் பயிற்சிப் பயிலுநர்களுக்கு ஊக்குவிப்புப் பணமாக மாதந்தோறும் நானூற்றைம்பது ரூபா வழங்கப்படவுமுள்ளது.

தையல் வேலை, வாழைநார் பயிற்சி, தென்னம் பொருள் உற்பத்தி, பனம் பொருள் உற்பத்தி, பிரம்புத் தொழில், உணவுகள் பதப்படுத்தல் போன்ற பல சுய தொழிற் பயிற்சிகளும், களஞ்சியசாலை எழுதுவினைஞர், பொது எழுதுவினைஞர், கணக்கு எழுதுவினைஞர், தாதிப் பயிற்சி, ஆங்கில சுருக்கெழுத்துப்பயிற்சி, தமிழ் சுருக்கெழுத்துப் பயிற்சி போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (109)

## தமிழ் சினிமா எங்கே போகிறது?

## ஒரு சண்டைக் காட்சிக்காக 600 ஆடுகள் பலி!

[சென்னை]

தமிழ் சினிமா படம் ஒன்றிற்காக 600 ஆடுகளின் உயிர்கள் பறிக்கப்பட்ட பரிதாப சம்பவம் அண்மையில் சென்னையில் இடம்பெற்றுள்ளது.

'பங்காளி' என்ற படத்தில் ஒருசில நிமிட நேர சண்டைக்காட்சிக்காகவே இவ்வளவு ஆடுகளும் வெட்டிச் சாய்க்கப்பட்டன. தலைகள் வெட்டப்பட்டு தோலுரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான ஆடுகள் தொங்கவிடப்பட்டிருக்க கதாநாயகன் அவற்றுக்கிடையே விழுந்து எதிரிகளைப் பந்தாடிக் கொண்டிருந்தார்.

இந்தக் காட்சிக்காக 150 ஆடுகள் தொங்கவிடப்பட்டு படப்பிடிப்பு நடந்தது. முதல்நாள் தொங்கவிடப்பட்ட ஆடுகள் மறுநாள் துர்நாற்றம் வீசும் என்பதால் அடுத்தடுத்து நான்குநாள் படப்பிடிப்பிற்கும் 600 ஆடுகள் வெட்டப்பட்டனவாம். (சி)

## கூட்டுறவு பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்

யாழ். கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவு தராதரப் பத்திர கனிஷ்ட, சாதாரண பிரிவு பயிற்சி நெறிகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பமுடிவு திகதி இம்மாதம் 25ம் திகதி ஆகும். (மா)

## உப்பு அள்ளத் தடை

[புலோலி]

வல்லை கடல் நீரேரியில் மறு அறிவித்தல்வரை உப்பு அள்ள வேண்டாமென தமிழீழ ஆய்வு நிறுவனம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது

இக்கடல் நீரேரியில் தற்போது போதிய உப்பு இன்னமும் விளையாததால் உப்பு அள்ள வேண்டாமென ஆய்வு நிறுவனம் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளது. (61)

## மாவீரர் சுவரொட்டி: மக்களிடம்பெற்று பிரசுரிக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

1992ம் ஆண்டு மாவீரர் நாளுக்குரிய சுவரொட்டி ஓவியங்களையும், சுவரொட்டி வாசகங்களையும் இம்முறை மக்களிடம் பெற்றுப் பிரசுரிக்க மாவீரர் பணிமனை விருப்பம் கொண்டுள்ளது என்று தமிழீழ மாவீரர் பணிமனை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இதன்மூலம் பலதரப்பட்ட கருத்துக்களையும், எண்ணங்களையும் பரவலாகப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று நம்புகின்றோம். எனவே இவ் ஓவியங்களையும், கருத்துச் செறிவுள்ள வாசகங்களையும் இம் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் தமிழீழ மாவீரர் பணிமனை கொக்குவில் என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ நேரடியாகவோ ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். சுவரொட்டி வாசகங்கள் நாலு வரிக்குட்பட்டதாகவும், சுவரொட்டிகள் மாவீரர் தற்கொடையையும், போராட்ட உணர்வைத் தூண்ட கூடியதாகவும் அமைந்திருக்கவேண்டும்.

## பரிசளிப்புவிழா

(புங்குடுதீவு)

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தீவகப் பிரிவினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சென். ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறும். (101)

## ஆங்கில பயிற்சி வகுப்பு

[உடுவில்]

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் முறை சாராக் கல்விப் பிரிவினரால நடாத்தப்பட்டு வரும் வளர்ந்தோருக்கான கல்விப் பயிற்சியின் கீழ், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சனி, ஞாயிறு தினங்களில் மாலை வேளைகளில் நடாத்தப்படவுள்ள இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை வித்தியாலய அதிபரிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## மெய்வல்லுநர் போட்டி

[உடுவில்)

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் அதிபர் க. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது. மருதனார்மடம் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா பிரதம விருந்தினராகவும், உடுவில் கொத்தணி அதிபர் திருமதி ம திருச்சிற்றம்பலம் சிறப்பு விருந்தினராகவும் இப்போட்டிகளில் கலந்துகொண்டனர். [109]

## மாணவர் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் மேற்கு காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தளபாடங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் மாணவர்களில் ஒரு பகுதியினர் மரங்களின் நிழலில் நிலத்தில் இருந்து படிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் குடிதண்ணீர் பெறுவதற்கும் மாணவர்கள் பலதத சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (72)

## இந்து சமயப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தின 1992ம் ஆண்டு இந்து சமய இறுதிப்போட்டி இன்று ஞாயிறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பண்ணிசை. பேச்சு என்பவற்றில் பிரிவு ரீதியில்முதலாம், இரண்டாம், மூன்றாம் இடம் பெற்றோர் பங்குபற்றவுள்ளாரர்கள். [155]

## பாராட்டு வைபவம்

[கொக்குவில்]

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய அலங்கார உற்சவ இறுதி நாளில் நடந்த பாராட்டு வைபவத்தில் ஆலய பிரதம சிவாச்சாரியார் க. சிவதாசக்குருக்களும் ஆலய நித்திய பூசகர் விஜயகுமார சர்மாவும் பாராட்டியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டனர். [135]

## பொருட்கள் விநியோகம்

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் கடந்த வருடம் நவம்பர் மாதம், இவ்வருடம் மார்ச் மாதம் ஆகியவற்றுக்கான மாணவர் உணவு முத்திரைக்கு பொருட்களை வழங்கி வருகிறது. (61)

வெங்கட்ராமன்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

ளார்.

சென்னையில் இவர் தங்கியிருப்பதற்காக பங்களா ஒன்று புதுப்பிக்கப்பட்டு வருகிறது. (ரி)

## இன்று கண்காட்சி

(உடுவில்)

யாழ்ப்பாணம் தொழில் திணைக்கழகத்தின் அனுசரணையுடன் உடுவிலில் இயங்கி வந்த தையல் பயிற்சி நிலையத்தினரின் கண்காட்சியொன்று இன்று 20ம் திகதி பிற்பகல் மூன்றுமணி முதல் ஐந்துமணி வரையும், நாளை செவ்வாய்க்கிழமை காலை பத்துமணி முதல் மாலை ஐந்துமணிவரையும் நடைபெறஉள்ளது.

இத்தையல் பயிற்சி நிலையத்தில் கடந்த ஒன்பது மாதங்களாக பயிற்சி பெற்ற பெண்களால் உருவாக்கப்பட்ட உடைகளும், தையல் வேலைப்பாடுகளும் கண்காட்சியில் வைக்கப்படும். (109)

## எழுச்சிக்கூத்து

[மானிப்பாய்]

நவாலியில் விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் போர்க்கால யாத்திரையின் எழுச்சிக் கூத்து நேற்று மூன்தினம் இடம்பெற்றது

நவாலி முருகமூர்த்தி ஆலய முன்றலில் இரவு 7 மணி தொடக்கம் இடம் பெற்ற இவ்வைபவத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டு இதனைக் கண்டுகளித்தனர். [71]

## நேர்காணல் அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டம் நடத்தும் நேர்காணல் அரங்கு இம்மாதம் 25ம் திகதி சனிக்கிழமை நல்லூர் கம்பன் கோட்டத்தில் ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும். இவ்அரங்கில் ''இதழியலில் நமது அனுபவங்கள்'' என்னும் பொருளில் திரு. பி. எஸ். பெருமாள், திரு சிவசரவணபவன் (சிற்பி] ஆகியோர் உரையாற்றுவர்.

## இலவச பால்மா

(அரியாலை)

கடந்த சனிக்கிழமை வறிய குடும்பங்களைச் சேர்ந்த மூன்றரை வயதுக் குழந்தைகள் உள்ள பெற்றோருக்கு லக்டோஜன் பால்மா இலவசமாக புனித அடைக்கலநாயகி ஆலய குருமனையில் வைத்து வழங்கப்பட்டது. (59)

## சுற்றுலா செயலகம்

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட வல்வெட்டித்துறையில் சுற்றுலா பிரதேச செயலகம் அண்மையில் முதன்முதலாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை அமெரிக்க மிஷன் பாடசாலைக்கருகில் ஆரம்பிக்கப்பட்ட இச் செயலகத்தில் 150 பிரச்சனைகள் தீர்த்துவைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. [150)

## விண்ணப்பங்கள் கோரப்படுகிறது

[உடுவில்]

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் பரதநாட்டியம் கர்நாடக சங்கீதம் ஆகிய பாடங்களுக்குரிய செய்முறை பரீட்சைக்கு பரீட்சகர்களை தெரிவுசெய்ய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பாடசாலைகளில் பரதநாட்டியம் கர்நாடக சங்கீதம் ஆகிய பாடல்களை போதிக்கும் ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் பயிலுனர் ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பங்கள் யாவும் செப்ரெம்பர் 30ம் திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளர், பாடசாலைப் பரீட்சைகள் தரவுக்கிளை பரீட்சைத் திணைக்களம், மலேவீதி, கொழும்பு-2 என்றமுகவரிக்கு அனுப்பப்படவேண்டும். (109)

## இலங்கை கடற்படை தாக்கிய
# தமிழக மீனவருக்கு
## சிறப்பு மேம்பாட்டு திட்டம்

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு சிறப்பு மேம்பாட்டு திட்டமொன்று ஏழரை கோடி ரூபா செலவில் 5 மாவட்டங்களில் அமுல் படுத்தப்படவுள்ளது.

மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஏ. ஜெயகுமார் நேற்று திருநெல்வேலியில் பத்திரிகையாளரிடையே பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

முதற்கட்டமாக இத்திட்டம் ராமநாதபுரம் மாவட்டத்தில் அமுல் படுத்தப்படும் என்றும் இதன் மூலம் ஆயிரம் மீனவர்கள் பயன் பெறுவர் என்றும் இவர்கள் ஆண்டொன்றுக்கு 20 ஆயிரம் ரூபா வருமானம் கிடைக்க வழி ஏற்படுமென்றும் அவர் கூறினார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டு இறப்பும் இழப்பும் ஏற்பட்டுவருவது குறித்து சட்டசபையிலும் குரல் எழுப்பப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (கே)

## அரசினால் தீர்க்கப்படாத பிரச்னைகளை
# வடக்கு-கிழக்கு மக்களுக்கு
# தெரிவிக்க அநுரா முடிவு!

(கொழும்பு)

ஐ. தே. க. பதவிக்கு வந்து 15 ஆண்டுகள் சென்றும் தீர்க்கப்படாத பிரச்னைகள் குறித்து வடகிழக்கு மக்களுக்கும் எடுத்துக் கூறப் போவதாக அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த 15 ஆண்டு கால ஐ. தே. க ஆட்சியில் வடகிழக்கில்' இனப்போர் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. தெற்கிலும் வன்முறைகளும் நடந்துள்ளன என்பது சிறிலங்கா சுதந்திக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ. தே. கவினால் இப்பிரச்னைகளை தீர்க்க முடியாதென்பதனை வட-கிழக்கு மக்களுக்கும் விளக்கப் போவதாக அநுரா பண்டாரநயக்கா தெரிவித்துள்ளார். (கே)

# தமிழக 'பொலிஸார்
# எண்மர் கைது

(சென்னை)

தமிழக அண்ணாமலைநகர் காவல் நிலையத்தில் கடந்த மாதம் 2ம் திகதி விசாரணைக் கைதி ஒருவர் மரணமடைந்தது தொடர்பாகவும் அவரது மனைவி மானபங்கப்படுத்தப்பட்டது தொடர்பாகவும் 2சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட 6 பொலிசார்கைதாகியுள்ளனர்.

இவர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக நீதி விசாரணைக்கும் உத்தரவு இடப்பட்டுள்ளது. (கே)

## தமிழ்நாட்டில்
# சட்டம் ஒழுங்கு
# மோசமடைகிறது

(சென்னை)

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்குமுறை மோசமடைந்து வருவதாக தமிழக ஜனதா பிரிவு குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்றுமுன் தினம் பழனியில் கூடிய மாநில ஜனதாதள் நிர்வாகக் குழுக்கூட்டத்தில் இதற்கான தீர்மானமொன்று நிறைவேறியுள்ளது.

இக்கூட்டத்திற்கு திரு. சிவாஜிகணேசன் தலைமை தாங்கினார். (கே)

# தமிழக கோயில்களில்
# கொள்ளைகள் அதிகரிப்பு

(சென்னை)

தமிழ்நாடு கோயில்களில் கொள்ளைகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்ட ஆதிகேசவசுவாமி கோவிலில் பல லட்சம் ரூபா கொள்ளை போன பின்பு, கோயில் நிர்வாகங்கள் பல தங்களது கோயில்களில்உள்ள நகைகளை சரிபார்க்க தொடங்கின.

முக்கியமாக கன்னியாகுமரி மாவட்ட கோயில்களில் பல லட்சம் ரூபா பெறுமதிமிக்க ஆபரணங்கள் காணாமல் போனது கண்டுபிடிககப்பட்டுள்ளது. இது தொடர்பாக பல பேர் கைதாகியுள்ளனர்.

மேலும் பல கோயில்களில் இப்படியான நிகழ்வுகள் தொடராமல் இருக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது. [கே)

### ஆனையிறவை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் செல்லலாம் என இராணுவம் அறிவித்தும் மக்கள் இதை செவிமடுத்ததாக இல்லை என மேலும் பி பீ. சி. செய்தியாளர் தெரிவித்துள்ளார். (கே)

## நாளை
## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் மு. வே வாஞ்சிநாதனின் 'நெருப்பு மழை' என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழீழ விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் இளங்குமரன், நிதர்சனம் பொறுப்பாளர் பரதன், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை உட்பட மற்றும் பலரும் பங்கு பெறவுள்ளனர்.

''போர்முனையில் நெருப்ப மழை' என்ற சின்னமணி குழுவினரின் வில்லிசையும் இடம்பெறும். (சு)

# தமிழக பஸ்களில்
## பொலிஸ் பாதுகாப்பு

(சென்னை)

திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் அரசுக்குச் சொந்தமான பஸ்களில் கொள்ளைகள் அதிகரித்துள்ளதால் பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### தமிழ் அகதிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறது,

மூகாமில் வாழ்ந்த இரு தமிழ் மக்கள் முஸ்லிம்களால் கடத்திச்செல்லப்பட்டனர். இந்த முகாமில் இருந்து ஏற்கனவே எட்டு தமிழ் மக்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முத்துகல தமிழ்க் கிராமத்தில் முஸ்லிம்களின் வன்முறையால் இடம் பெயர்ந்த தமிழ் மக்களே 'பேய்தாளை' அகதி முகாமில் தங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மஞ்சுத்தொடுகாய் என்ற மற்றொரு கிராமத்திலும் பலவந்தமாக குடியேற்றப்பட்ட தமிழ் மக்களையும் முஸ்லிம்கள் துன்புறுத்தி வருகின்றார்கள் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

### வடக்கு-கிழக்கு

[1-ம் பககத் தொடர்ச்சி]

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இராணுவச் செலவுகள் இலங்கையின் பொருளாதாரத்தின் பெரும் பகுதியைப் பதம் பார்த்துவிட்டது.

அதிகரிக்கும் பாதுகாப்புச் செலவுகளைச் சமாளிப்பதற்கு பெருமளவு வெளிநாட்டுக் கடன்களையும், உள்ளூர் கடன்களையும் வாங்கு ஓர இக்கட்டான நிலைக்கு அரசு தள்ளப்பட்டிருக்கிறது.

அதிகரித்துவரும் உள்ளூர் வரிவிதிப்புக்கள் பொதுமககளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதுடன் அவர்கள் மத்தியில் தற்போது ஒரு கொந்தளிப்பையும் ஏற்படுத்தி வருவதாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது எனவும் அந்த நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### அத்துமீறிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணங்களை கூறிவருகிறது.

தமிழ் மக்கள் வாழாத காட்டுப் பகுதிகளில் நாட்டை வளம்படுத்தும் நோக்குடன், குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதுவதாகவும், சிங்களவர் மாத்திரமின்றி முஸ்லிம்களும், தமிழர்களுமே குடியேற்றப்படுகிறார்கள் என அத்துமீறிய குடியேற்றங்களை அரசு நியாயப்படுத்துகிறது.

இத்தருணத்தில் சிங்கள அரசியல் கட்சிகள் வெளிப்படையாக இந்த அத்துமீறிய குடியேற்றங்களை ஒப்புக்கொண்டு இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்தக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கே)

## வீரச் சாவு

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையே நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலொன்றில் மணிமுடி அல்லது சூட்டி (தனபாலசிங்கம் தெய்வீகநாதன் அல்லாரை தெற்கு, அல்லாரை) என்ற போராளி வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

இவ் வீரவேங்கைக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெவித்துக் கொள்கின்றன.

## இந்தியத் தொழிற்சாலையில்
# 'ரோபோ' மனிதன்

(கொழும்பு)

கைத்தொழில ஆலைகளில் 'ரேபோ' எனற இயந்திரமனிதனைப் பயன்டடுத்த இந்தியா ஆரம்பித்துள்ளது.

இதன்படி மோட்டார் வாகனத் தயாரிப்பில் 'ரேபோப்கள்' அங்கு பயன்டடுத்தகபடுகின்றன. மனிதன் கைகளால் வேலை செய்வதை இயந்திரமனிதன் சம்யூட்டரின் கட்டுப்பாட்டினால் செய்கின்றான்.

மாருதி நிறுவனத்தில் இந்த ரேபோக்கள் ஒட்டு வேலைகள் செய்வதற்கு இப்போது பயன்டடுத்தப்படுகின்றன. (சு)

### அத்தனகல

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியிலுள்ள பெரும்பாலானோர் வரவேற்றபோதும்கூட கடசியின் சில சிரேஷ்ட உறுப்பினர்கள் தம்மை தடுக்க முற்படுகின்றனர் என்றும் சில சிரேஷ்ட தலைவர்கள் உட்பட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் நாம் கட்சியில் சேர்வதை விரும்பவில்லை என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. நாடே அறிந்த உண்மை என்றும் தெரிவித்துள்ளார்.

இவரது இந்தக் கூற்று தமது சகோதரர் அநுரா பண்டாரநாயக்காவையே மறைமுகமாகக் குற்றம்சாட்டுவாத அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க)

### அரசுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டன. கார்கள், வான்கள், மோட்டார் சைக்கிள்கள் இந்தப் பேரணியில் அணிவகுத்துச் சென்றன.

குருநாகல், பொலநறுவை ஊடாக இந்த வாகனப் பேரணி அநுராதபுரம் சென்றடைந்தது.

ஐக்கிய தேசியக்கட்சி அதன் 15-வது வருட ஆட்சிக் காலத்தை நடத்திக் கொண்டிருக்கும் தருணத்தில் இந்தப் பேரணி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அரசுக்கு எதிராக பல விதமான குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

கடந்த 15 வருடகாலத்தில் வடக்கு கிழக்கு பிரச்னை தீர்க்கப்படாதது மாத்திரமல்லாமல் அதை மேலும் சிக்கலான நிலைக்குத் தள்ளியிருப்பதும் அரசுக்கு எதிராக தெரிவிக்கப்பட்டிருந்த முக்கியமான குற்றச்சாட்டுக்களில் ஒன்றாகும்.

## பர்மிய அரசுக்கு எதிரான
# வானொலி ஒலிபரப்பு

(ஸ்ரொக்கோம)

பர்மாவில் ஜனநாயகம் பிறக்கும் பிரசாரத்தில் ஈடுபட, நோர்வே நாட்டிலிருந்து பர்மிய அரசுக்கு எதிராக 'இணை அரசு வானொலி' ஒன்று செயல்படத் தொடங்கியுள்ளது,

இந்த இரகசிய வானொலிக்கு நோர்வே அரசு அனுமதியளித்துள்ளது.

பர்மாவில் அரசுக்கெதிராக தன் இனத்தின் மேம்பாட்டுக்காக பர்மிய 'கரே' இன போராளிகள் போராடி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கே)

### எதிரணியினரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டது போல தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மோட்டார் பவனி ஊர்வலம் மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கையெழுத்து வேட்டையும் வெற்றி தராதென பி. பி. சி. முகவர் தெரிவிக்கிறார்.

எதிர்க்கட்சிகளின் இப்போதைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பிரசாரங்கள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு பெரும் கவலையைத் தராதெனவும் அவர் மேலும் கூறினார். (கே)

## க. பொ. த. மாணவர்க்கு
# வணிகத்துறை கருத்தரங்கு

(உடுவில்)

இவ்வருடம் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் வணிகத்துறை மாணவர்களுக்கு கணக்கியல், வர்த்தகம் ஆகிய பாடங்களில் விளக்கங்களும், கருத்தரங்குகள் மூலமான விடயப் பரிமாறல்களையும் மேற்கொள்ள மருதனார்மடம் கல்விக்கோட்ட வணிகவள நிலையம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக மானிப்பாய் கொத்தணி மாணவர்களுக்கான கருத்தரங்குகள் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடாத்தப்பட்டது.

தொடர்ந்து மருதனார்மடம் கோட்டத்துக்கான சகல கொத்தணிகளிலும் இவ்வாறான கருத்தரங்குகள் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [109]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8